**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 107/2010**

திரு. சின்னசாமி (D.W –1) **29.01.2026**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.**

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்ட கூடுதல் ஆவணங்களை பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யவேண்டும்.

1. 01.01.1946 – கொண்டாகவுண்டர் பெயரில் உள்ள கிரைய பத்திரம் – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 1

2. 25.08.1958 – கொண்டாகவுண்டர் வகையறா இடையே ஏற்பட்ட மறு கிரைய உடன்படிக்கை ஆவணம் – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 2

3. 23.12.1964 – கொண்டாகவுண்டர் வகையறா இடையே ஏற்பட்ட கிரைய ஆவண எண்.1855/1964 – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 3

4. 13.08.1966 – வெங்கடாசலம் வகையறா இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 4

5. 15.12.1969 – சின்னசாமி, ராமசாமி, அம்மாசை, லிங்கப்பன் ஆகியோர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் – சான்றிட்ட நகல் (அசல் ஆவணம் சாட்சியிடம் உள்ளதாக கூறுகிறார்) – பி.வா.சா.ஆ– 5

6. 30.04.1974 – கோயமுத்தூர் மாவட்ட நீதிமன்றம் மேல்முறையீடு வழக்கு எண்.297/1972 தீர்ப்புரை – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 6

7. 20.12.2004 – இடைகால மனு எண். 136/2004 நிறைவேற்று மனு எண். 81/2003 உத்தரவு – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 7

8. 13.12.2007 – நிறைவேற்று மனு எண். 81/2003 சுவாதீன ரசீது மற்றும் அமீன் அறிக்கை – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 8

9. 4.06.2025 – திருப்பூர் தெற்கு நல்லூர் கிராமம் க.ச.எண். 139/3ஏ பட்டா எண். 1997 க்குரிய சிட்டா கணினி நகல் – பி.வா.சா.ஆ– 9

10. 30.12.2013 – 3ம் வாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் – சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ– 10

11. 08.12.2025 – திருப்பூர் தெற்கு நல்லூர் கிராமம் க.ச.எண். 139/3ஏ பசலி 1434 க்குரிய அடங்கல் – உண்மை நகல் – பி.வா.சா.ஆ– 11

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர். கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.